**Starting time 12.17 P.M.**

# <u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>

**O.S. No. 351/2002**

Deposition of **<u>P.W. 3</u>** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 05-12-2022 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : முத்துசாமி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> : தாவா சொத்துக்களின் சர்வே எண்கள் என்னவென்றால், சர்வே எண் 72/14-ல் 16 செண்ட், 72/15-ல் 75 செண்டும், 72/17-ல் 10 செண்டும் ஆகும். தாவா சொத்துக்கள் சம்மந்தமான ஆவணங்கள் எதுவும் வாதிகள் பெயரில் உள்ளதாக நான் பார்த்தேனா என்றால், இல்லை. சர்வே எண் 72/17 சம்மந்தப்பட்ட அ பதிவேடு, புலவரைபடம், அடங்கல் உள்ளிட்டவற்றவைகளை பார்த்தேனா என்றால், இல்லை. சர்வே எண் 72/17-ல் உள்ள சொத்து வருவாய் துறை ஆவணங்ளில் என்னவென்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால், மணி பெயரில் விவசாய நிலமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் சொல்வதுபோல் மேற்படி சொத்து மணி பெயரில் பதிவு செய்யப்படவில்லை என்றும், அது விவசாய நிலமும் அல்ல என்றால், சரியல்ல.

2. வாதி மணி பெயரில் உள்ள கிரயப்பத்திரங்களை பார்த்துள்ளேனா என்றால், பார்த்துள்ளேன். அந்த ஆவணங்கள் எதிலாவது, தாவா சர்வே எண்கள் சொல்லப்பட்டுள்ளதா என்றால், சொல்லப்பட்டுள்ளது. அது எந்த தேதியிட்ட

கிரயப்பத்திரம் என்றால், அது நினைவில் இல்லை. ஆவண எண் 189/93 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள பத்திரம் யார் பெயரில் உள்ளது என்றால், மணி பெயரில் உள்ளது. எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள பத்திர எண்கள் 1488/2013, 753/2016 ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்றால், வாதி மணி பெயரில் உள்ளது.

3. அசல் வழக்கு எண் 351/2002 என்ற அசல் வழக்கை யார் தாக்கல் செய்தது என்றால், மணி, ஆறுமுகம் மற்றும் பெரியசாமி ஆகியோர்கள் மருதை வகையறா மீது தாக்கல் செய்துள்ளார்கள். சர்வே எண் 72/17-ல் உள்ள சொத்து வருவாய் துறை ஆவணங்களில் பாதை என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதை நான் பார்த்தேனா என்றால், பார்த்தேன் ஆனால் அதுபோல் பாதை என்று எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் நில அளவையர் கொடுத்த புலவரைபடத்தில் உள்ளவாறுதான் நான் பார்த்த புல வரைபடமும் இருந்ததா என்றால், இருந்தது, ஆனால் அதில் பாதை இல்லை.

4. வாதி மணி சம்மந்தப்பட்ட ஆவணங்கள் எதிலாவது நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேனா என்றால், இல்லை. வாதி குடும்ப ஆவணங்கள் எதிலாவது தாவா சர்வே எண் 72/17-ல் உள்ள சொத்தை குறித்து எதுவும் எழுதப்பட்டுள்ளதா என்றால், நினைவில் இல்லை. தாவா சொத்துக்களில் வாதி அனுபவித்து வருவதற்கு ஆதரவாக அனுபவச் சான்று எதுவும் வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளாரா என்று தெரியுமா என்றால், வாங்கியுள்ளார், ஆனால் தாக்கல் செய்தாரா என்று தெரியவில்லை.

5. அருணாச்சலம் வீட்டிற்கு பின்புறம், பெரியசாமி வீட்டிற்கு தென்புறமும் செல்வதாக சொல்லும் பாதை சம்மந்தப்பட்ட வரைபடம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. பிரதிவாதி சுந்தரி, எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள பாதையைத்தான் பயன்படுத்தி வருகிறார் என்றும், சர்வே எண் 72/17-ல் உள்ள பாதையை பயன்படுத்துவதில்லை என்று சொல்லியுள்ளதால், அவ்வாறு நான் சொல்லும் பாதையைத்தான் பிரதிவாதி பயன்படுத்தி வருகிறார் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா

என்றால், இல்லை.

6. தாவா சொத்து விவரத்தில் உள்ள மூன்று சர்வே எண்களில் உள்ள சொத்துக்களும் இன்றைய நாள் வரை அரசாங்கத்தின் பெயரில்தான் உள்ளது என்றால், அச்சொத்து தீர்வை ஏற்பட்ட தரிசாக உள்ளது, அதை வாதிகள் அனுபவித்து வருவதால் அதற்கு பட்டா கேட்டு மனு கொடுத்துள்ளார்கள். அவ்வாறு தாவா சொத்துக்களை வாதிகள் அனுபவித்து வருவதாகவும், அதற்கு பட்டா கேட்டு மனு கொடுத்துள்ளதாகவும் சொல்வது பொய் என்றால், சரியல்ல. சர்வே எண் 72/17-ல் உள்ள சொத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பாதையாக ஒதுக்கப்பட்ட சொத்து என்றும், அதை தனி நபர்கள் யாரும் உரிமை கேட்க இயலாது என்றால், அதுபோல் பாதையே எதுவும் இல்லை, தென்னை மரங்கள்தான் உள்ளது.

7. சர்வே எண் 72/17-ல் உள்ள பொது பாதையை வாதிகள் கொஞ்சம் கொஞ்சமாக ஆக்கிரமிப்பு செய்து கொண்டதால் அதை அகற்ற வேண்டிதான் வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், சரியல்ல. தாவா சொத்துக்களை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது, அப்போது நான் வெளியூரில் இருந்தேன். அதனால் சர்வே எண் 72/17-ஐ அளந்து பார்த்தபோது அச்சொத்து எவ்வாறு இருந்தது என்று நேரடியாக தெரியாது என்றால், சரிதான். சர்வே எண் 72/17-ல் உள்ள தடம் தென்வடலாக 6 மீட்டர் அகலத்தில் அமைந்துள்ளது என்றால், சரியல்ல.

8. வாதி மணி குடும்பத்தாருக்கு சர்வே எண் 182/1A, 1B நிலங்களை மட்டும்தான் விவசாய நிலங்களாக அனுபவித்து வருகிறார்கள் என்றும், எனவே தாவா சொத்துக்களில் அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் அவர்களது சொத்துக்களுக்கு செல்லும் பாதையை அழித்துவிட்டு ஆக்கிரமிப்பு செய்யவேண்டி வாதிகள் பொய்யாக வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் வாதிகள் தயாரித்து கொடுத்து நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. வழக்கின் தன்மை மற்றும் ஆவணங்கள் குறித்து எதுவும் தெரியாமல் நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

1, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time : 12.42 P.M.

**ஒப்பம்/- ஜி.யுவராஜ்**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**